# உதயன்

விலை ரூபா 6-00

ஏடு 14 வள்ளுவர் ஆண்டு 2030 சித்திரை 31 வெள்ளிக்கிழமை (14-05-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 145


14 MAY 1999

## புளொட் - ரெலோ மீண்டும் வவுனியாவில் முறுகல்

வவுனியா, மே 14

வவுனியாவில் மீண்டும் புளொட் அமைப்புக்கும், ரெலோ அமைப்புக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குருமண்காட்டில் உள்ள ரெலோ முகாம் முன்பாகச் சென்ற புளொட் உறுப்பினர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும்—

தோணிக்கல் பகுதியில் இரு புளொட் உறுப்பினர்களை ரெலோ உறுப்பினர்கள் கைது செய்தனர் என்றும் —

பூந்தோட்டம் பகுதியில் இரு தரப்பினரும் ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர் என்றும் கூறப்பட்டது.

இரு குழுக்களுக்கும் இடையில் மோதல் வெடிக்கும் நிலை நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-3-161)

## நீர்வேலியில் 5 மாணவர்கள் காணாமற்போய்விட்டனர்!

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

அச்சுவேலி, மே 14

நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் ஐவர் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காணாமற் போயுள்ளனர் என்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் 17 வயதுடையவர்களான யாழ் இந்துக் கல்லூரி மாணவனான கந்தசாமி ராஜ்கண்ணன் —

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மாணவர்களான நாகரத்தினம் கஜன், வேலாயுதம் பிரதீபன், தம்பிராசா ஜெயரூபன்—

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவனான இராஜதுரை நீரோ—ஆகியோரே இந்த ஐவரும் ஆவர்

சம்பவதினம் அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள சனசமூகநிலையத்தின் மைதானத்தைத் துப்புரவு செய்யும் பணியில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர் என்றும்—

அதன் பின் இவர்கள் வீடு திரும்பவில்லை என்றும் — இவர்களின் பெற்றோர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் சுட்டுக்கொலை!

## உரும்பிராய்ப் பகுதியில் நேற்று இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், மே 14

வலி-கிழக்குப் பிரதேச சபையின் ஈ. பி. டி. பி. உறுப்பினர் முருகர் பூபாலசிங்கம் (வயது 56) என்பவர் நேற்றிரவு 7.30 மணியளவில் உரும்பிராயில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உரும்பிராயில் உள்ள தமது கடையில் இவர் இருந்த சமயம் அங்கு வந்த இனந்தெரியாதவர்களால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்;

இவரது உடலில் ஆறு சூட்டுக்காயங்கள் காணப்பட்டன என்றும்—

சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

வலி. கிழக்குப் பிரதேச சபையில் ஈ.பி.டி.பி. சார்பில் அங்கத்தவராகவுள்ளவர்களில் சுட்டுக் கொல்லப்பட்ட மூன்றாவது உறுப்பினர் இவராவார். (இ-3-173)

## அமெரிக்க தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 14

யூகோஸ்லாவியா மீதான நேட்டோ தாக்குதல் நிறுத்தப்படவேண்டும் எனக்கோரி நேற்று வியாழக்கிழமை கொழும்பில் உள்ள அமெரிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியங்காட்டில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், மே 14

கல்வியங்காட்டுப் பகுதியில் இளைஞர் ஒருவர் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கல்வியங்காடு இராசபாதை வீதியைச் சேர்ந்த சரவணமுத்து அமலன் (வயது 26)

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நேரடியாக் மக்களைப் பாதிக்கும் வழக்குகளில் மட்டும் ஆஜர்

### சட்டத்தரணிகள் முடிவு

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணத்தில் மக்களை நேரடியாகப் பாதிக்கும் வழக்குகளில் மட்டும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜராவதென்று யாழ். சட்டத்தரணிகள் தீர்மானித்துள்ளனர்.

யாழ். சட்டத்தரணிகள் சங்கம் நேற்று யாழ். நீதிமன்ற கட்டடத்தில் கூடி யாழ். மாவட்ட சட்ட நிலைமை தொடர்பாக ஆராய்ந்தது.

சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதால் பொதுமக்களை நேரடியாகப் பாதிக்கும் வழக்குகளில் சடத்தரணிகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மீன்பிடிக்க படையினர் கட்டுப்பாடு

திருகோணமலை, மே 14

திருகோணமலைக் கடற்பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கு நேற்று முதல் கடற்படையினரால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

காலை 5 — மணி முதல் மாலை 5 மணி வரை கரையில் இருந்து ஐந்து கடல் மைல் தூரத்தில் மட்டுமே மீன்பிடிக்க முடியும் என்றும்;

கோணேஸ்வரர் மலையை அண்டிய கடற் பிரதேசத்தில் மீன்பிடிப்பது தடை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அனுப்பவேண்டாம் எனக்கோரி மடுவில் உள்ள அகதிகள் பேரணி

மன்னார், மே. 14

மடுப் பிரதேசத்தில் உள்ள முகாம்களில் தங்கியுள்ள யாழ். மாவட்ட மக்கள் தம்மை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வேண்டாம் என்று கோரி நேற்று முன்தினம் பேரணி ஒன்றை அங்கு நடத்தினர்.

மடு திறந்த வெளி அகதி முகாம் முன் கூடிய அகதிகள் பேரணியாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வரை சென்று தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

அதன் பின் பேரணியினர் முசலி பிரதேச செயலகத்துக்குச் சென்று அங்கும் மகஜர் கையளித்தனர்.

யாழ்ப்பாணத்தில் சொந்த இடங்களில் குடியமரக்கூடிய சூழ்நிலை இல்லை என்றும் —

தொழில் வாய்ப்புக்கள் அங்கு இல்லை என்றும்—

அதன் காரணமாக தம்மை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வேண்டாம் என்றும் — அவர்கள் தமது மகஜரில் கேட்டுள்ளனர்.

மடு அகதி முகாமிலேயே தாம் தொடர்ந்து வாழ விரும்புவதாகவும் — வேறு முகாம்களுக்குத் தம்மை மாற்ற வேண்டாம் என்றும் — அவர்கள் கோரியுள்ளனர்.

அதே நேரம் — மன்னார் அரச அதிபர் எஸ். எம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மடுவிலிருந்து இன்று முதல் வவுனியாவுக்கு அகதிகள்

வவுனியா, மே 14

மடு அகதிமுகாமில் தங்கியுள்ள வவுனியாவைச்சேர்ந்த இரண்டாயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரம் பேர் இன்றுமுதல் வவுனியாவுக்கு அழைத்து வரப்படவிருக்கின்றனர்;

மடு அகதிமுகாமில் தங்கியுள்ளவர்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் இவர்கள் வவுனியா சிதம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் மீனவர் மீது தாக்குதல்

வவுனியா, மே 14

மன்னார் — பேசாலைக் கடற்பரப்பில்நேற்றுக் காலை 9 மணியளவில் கடற் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு மீனவர்கள் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது;

இராணுவ கட்டுப்பாடற்ற வெள்ளாங்குளம் — தேவன்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 285 பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம் இங்கு!

### ஓரிரு நாள்களில் வரும்

யாழ்ப்பாணம், மே 14

எண்ணாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் நியமனம் பெறும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 285 பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் ஓரிரு நாள்களில் இங்கு வந்து சேரவிருக்கின்றன.

கொழும்பில் உள்ள யாழ். அரச அதிபரின் இணைப்பு அலுவலக அதிகாரி இன்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மடுவிலிருந்து படையினரை விலக்கக்கோரி பெல்ஜியத்தில் ஊர்வலம்

மணிலா, மே 14

மடு தேவாலயப் பகுதியில் உள்ள படையினர் அப்பகுதியில் இருந்துவெளியேறவேண்டும் எனக்கோரி பெல்ஜியம் நாட்டின் பெடோ நகரில் நாளை ஊர்வலமும் உண்ணாவிரமும் இடம்பெற உள்ளன;

இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து பெல்ஜியம் நாட்டில் வசிக்கும் ஈழத்தமிழர்கள் இந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகள் நியமனம் கோரி கடிதம்

யாழ்ப்பாணம், மே 14

1996, 97 ஆம் ஆண்டுகளில் பட்டம்பெற்ற வேலைகிடைக்காத பட்டதாரிகளுக்கு எண்ணாயிரம் பட்டதாரிகள் நியமனத்தின் கீழ் நியமனம் பெற்றுத் தருமாறு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தேசிய வரவு செலவுத்திட்டப் பணிப்பாளருக்கு கடிதம்ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

யாழ். அரச அதிபரை நேற்றுச் சந்தித்து மேற்படி சங்க நிர்வாகிகள் இந்த விடயம் தொடர்பாக அவருடன் கலந்துரையாடினார்கள்.

இந்தச் சந்திப்பின் பின்னர் யாழ். அரச அதிபர் மூலம் தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளருக்கான கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

# சுகாதார பயிற்சிப் பட்டறை

நெல்லியடி, மே 14

ஐ. நா. அபிவிருத்தி திட்ட அனுசரணையில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆறு நாள் ஒன்றிணைந்த பங்கேற்புத் திட்ட பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ். இராசேந்திரம் தலைமையில் இம் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகும் இப் பயிற்சி 22 ஆம் திகதி வரை தினமும் நடைபெறும்.

இப் பயிற்சிப் பட்டறையில் சுகாதார வைத்திய ஒழுங்கமைப்பு சம்பந்தமான பிரதான விடயங்கள் உட்பட வேறு பல விடயங்களும் விளக்கப்படும்.

பிரதேச சபை, நகரசபைத் தலைவர்கள் உறுப்பினர்கள், பிரதேச செயலர்கள், சுகாதாரத் தொண்டர்கள், மாவட்ட வைத்திய அதிகாரி பதிவு வைத்திய அதிகாரிகள், உதவி வைத்திய அதிகாரிகள் உட்பட இன்னும் பலர் இப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வார்கள்.

## பாராட்டுகின்றோம்

வீரகேசரி நிறுவனம் வ. கி. மாகாணசபையைக் களமாகக் கொண்டு அகில இலங்கை ரீதியாக நடத்திய 1997க்கான தொடர் கதைப்போட்டியில் முதலாம் இடம் பெற்ற "அவிழாத முடிச்சுக்கள்" தொடர்கதையை எழுதிய எமது நிலைய முன்னாள் தலைவரும் கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபருமாகிய

**திரு. கே. வி. குணசேகரம்**

அவர்களைப் பாராட்டுகின்றோம்.

வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையம்
கோப்பாய்.

(65638)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



திருமதி
**ஜெயலக்ஷ்மி வேலாயுதபிள்ளை**

தோற்றம் 23—03—1919
மறைவு 14—04—1999

14—04—99 புதன்கிழமை சிவபதம் எய்திய எங்கள் அன்புத் தாயாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும் வேறு பல வகைகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

18/4, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(65723)

## வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் கடந்த 16 வருடங்களாக வர்த்தகப் பிரிவின் ஆசிரியையாக விளங்கி பாடசாலை வளர்ச்சிக்கு அயராது உழைத்த

**திருமதி ஞானாம்பாள் தெய்வேந்திரராஜா**
B. Com; Dip in Ed, S. L. E. A. S Gr-III

அவர்கள் கல்வி நிர்வாகசேவை தரம் III பரீட்சையில் சித்தியடைந்து, யாழ்ப்பாணம் கல்வி வலய திட்டமிடல் பிரிவில் உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவரை மனதார வாழ்த்துவதில் யா/அத்தியார் இந்துக் கல்லூரி பெருமை அடைகின்றது.

ஆசிரியர் கழகம்
யா/அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி.

(65728)


## புலமைப்பரிசில் 1999

37 ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

சு. லிஜா
யா/சுண்டுக்குளி ம. க.
ப. நிரோஷன்
யா/ இ. ஆ. பா.
கி. டல்ஷினி
யா/ இணுவில் இ. க.
வி. மயூரன்
யா/ இ. ஆ பா.
சோ. நிருபா
யா/ உடுவில் ம. க.
வி. ஜெயராஜா
க. நிரோஷி

அடுத்த பரீட்சை: 16-05-99

BOND
யாழ். நகர்.
(65736)

## நாகம்ஸ்

சுன்னாகம்.
இன்று முதல்
குதூகல ஆரம்பம்!
பிரபு - குஷ்பு
ராதாரவி - கவுண்டமணி
நடித்த
**சின்னத்தம்பி**
( இனிய பாடல்கள் நிறைந்தது )
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்) (65659)

## ராஜா

யாழ்ப்பாணம்.
கார்த்திக் -ரம்பா
மற்றும் பலர் நடித்த
**உள்ளத்தை அள்ளித்தா**
10-30, 2-30,
(சி/7477)

## லிபேட்டி

தியேட்டர்
அச்சுவேலி
இன்று முதல்
சரத்குமார் - விஜயசாந்தி
நடிக்கும்
ராஜஸ்தான்
காட்சிகள்: 10-30, 2-30
( பழைய நேரப்படி )
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
[illegible]
(65664)


## மரண அறிவித்தல்

திருமதி
**பொன்னன் பொன்னம்மா**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னன் பொன்னம்மா அவர்கள் 13-5-99 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் திரு. திருமதி மாணிக்கம் அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற இ. பொன்னன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பேரின்பநாயகம், கனகநாயகம், அருந்ததி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வநாயகம், அருமைநாயகம் (கல்வாரி சபை ஊழியர்), அமிர்தநாயகம் (கனடா), ராணி, சரஸ்வதி (இத்தாலி), தவநாயகம், கமலநாதன் (ஜேர்மனி), பாலசிங்கம் (சுவிஸ்), அமுதா ஆகியோரின் அன்புத் தாயாரும் மல்லிகாதேவி, மகேஸ்வரி, பற்றீசியா, தேவி, நகுலா, கீதா, தர்மராஜா, மோகன் (இத்தாலி), தெய்வநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌசி, மீனா, சிவாசினி, கௌசிகா, நிரோசா, நிலாந்தி, டெபோறா, மாலா, ஜென்சி, பிரியா, யூலியா, நிஷாந்தி, ராயூ, பிரசன்னா, சிவாகரன், சிவலோகன், பேபிராஜ, மதுஷன், பிரஸ்காந், நிரோசன், நியூட்டன், பிரசாந், பிரதீப், கிரிசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-5-99) வெள்ளிக்கிழமை பகல் 12 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. அருமைநாயகம்
(மகன்)

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(65735)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**பாக்கியம் நடனசபாபதிப்பிள்ளை**

தோற்றம் 26 — 09 — 1926
மறைவு 25 — 04 — 1998

திதி சதுர்த்தசி

எங்கள் அன்புத் தெய்வம்!

நீங்கள் எம்மைப் பிரிந்து ஓராண்டு ஓடிவிட்டது! குமுறியெழும் சோகத்தை காலத்தால் விழுங்கமுடியவில்லை. பிள்ளைகள் சாப்பிட்டியளா? என்ற பரிதவிப்புக் குரல் மருமக்கள் சுகமாயிருக்கிறீர்களா? என்ற பாசக்குரல் குஞ்சுகள் அம்மம்மாவை, அப்பாச்சியைப் பார்க்க எப்ப வரப்போறியள்? என்ற ஏக்கக்குரல் எங்கள் செவிப்பறைகளில் கேட்டுக்கொண்டேயிருக்கிறது எங்களுக்காக துடிதுடித்த அந்த உயிர்த்துடிப்பு அடங்கிப் போயினும் எங்கள் உணர்வுகளில், நினைவுகளில், கனவுகளில் என்றென்றும் எங்கள் தெய்வம் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றது. பாசத்தாலும், பண்பாலும் எம்மை அரவணைத்த எங்கள் கண்கண்ட தெய்வமே எங்கள் குலதெய்வமாய் என்றும் நீங்கள் வழிகாட்ட வேண்டும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் இன்று (14-05-99) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இதில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
ந. ஸ்ரீஸ்கந்தராசா
ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்,
பலாலி றோட், திருநெல்வேலி.
தொலைபேசி இல. 2865

(65733)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுதங்கள் மீது குந்தியிருக்கும் நாடுகளின் உபதேசங்களை இந்தியா ஒருபோதும் ஏற்காது

## வாஜ்பாய் கூறுகிறார்

புதுடில்லி, மே 14

அணுவாயுத குவியல்களின் மீது அமர்ந்திருக்கும் நாடுகள் அணு ஆயுத சோதனைகள் குறித்துச் செய்யும் உபதேசங்களை இந்தியா ஏற்றுக் கொள்ளாது.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை ஜலந்தரில் நடைபெற்ற பேரணி ஒன்றின் இறுதியில் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எந்த ஒரு நாட்டையும் இந்தியா ஒருபோதும் தாக்காது. அதேவேளை வெளியில் இருந்து வரும் எந்த அச்சுறுத்தலையும் அனுமதிக்காது. நாட்டின் பாதுகாப்பையும் பாதுகாப்புக்குத் தேவையான தற்காப்புப் பணிகளையும் இந்தியா ஒரு போதும் விட்டுக்கொடுக்காது— என்றும் வாஜ்பாய் தெரிவித்தார்.

அணுவாயுதங்களைதற்பாதுகாப்புக்காகத் தயாரிப்பது சரியானதுதான் என்ற இந்தியாவின் நிலையை யூகோஸ்லாவியா மற்றும் ஈராக்கில நடைபெறும் சம்பவங்கள் நிருபிக்கின்றன. அணுகுண்டுக் பரிசோதனைகள் நடத்தியதற்காக இந்தியாவைப் கண்டித்த நாடுகள் பின்னர் இத்தகைய சோதனைகளை நியயாப்படுத்தியுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

(ஐ-6)

# வாழப்பாடி வரவேற்பு

புதுடில்லி, மே 14

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சித் தலைவரும் மத்திய பெற்றோலியத் துறை அமைச்சருமான வாழப்பாடி ராமமூர்த்தி வரவேற்றுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன் தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் இந்த வழக்கில் உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளதாகவும் கடைசியில் வாய்மை வெற்றி பெற்று விட்டது என்றும் கூறியுள்ளார்.

(ஐ 6)

# பிரதமர் பதவி நீக்கம்

# ரஷ்யாவில் நெருக்கடி

## அதிபரை விலக கோருகிறது 'டுமா'



அதிபர் யெல்ட்சினும் பிரதமர் பிரமக்கோவும்

மொஸ்கோ, மே 14

ரஷ்யாவின் இடதுசாரி ஆதரவுப் பிரமுகரான யிவ்கேனி பிரிமக்கோவையும் அவரது அமைச்சரவையையும் அதிபர் பொறிஸ் யெல்ட்சின் திடீரெனப் பதவி நீக்கம் செய்துள்ளார். தற்காலிக பிரதமராக உள்துறை அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபரின் இந்த நடவடிக்கையைச் கண்டித்துள்ள ரஷ்ய நாடாளுமன்றத்தின் கீழ்ச்சபை (டுமா) அதிபர் யெல்ட்சின் உடனடியாகப் பதவிவிலக வேண்டும் என்று கோரி உள்ளது.

அதிபர் யெல்ட்சினுக்கும் பிரதமர் பிரிமக்கோவுக்கும் இடையே கடந்த சில வாரகாலமாகவே விரிசல் நிலவி வந்தது. பிரிமக்கோவ் பதவி நீக்கம் செய்யப்படலாம் என்ற எதிர்பார்ப்பு மொஸ்கோ வட்டாரங்களில் நிலவியது எனினும் அதிபருக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்று கீழ்ச்சபையான டுமாவில் நேற்று விவாதத்துக்கு வர இருந்த சமயத்தில் பிரதமர் பதவி நீக்கப்பட்டிருப்பது தான் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

'நாட்டின் பொருளாதாரத்துக்குப் புத்துணர்ச்சி அளிக்க பிரதமர் பிரிமக்கோவ் தவறிவிட்டதாக' கிரெம்ளின் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அதிபரைச் சந்திப்பதற்காக பிரிமக்கோவ் கிரெம்ளின் மாளிகைக்குச் சென்ற சமயம் யெல்ட்சினின் இந்த முடிவு அவரிடம் தெரிவிக்கப்பட்டது. ''பிரிமக்கோவ் அரசு திட்டமிட்ட பணியை நிறைவேற்றி விட்டது; ஆனால் வீழ்ச்சியுறும் நாட்டின் பொருளாதாரத்துக்கு புத்துயிர் அளித்து நிமிர வைக்க அது தவறிவிட்டது'' என்று அதிபர் யெல்ட்சின் தொலைக்காட்சி உரையில் தெரிவித்தார்.

பிரதமர் பிரிமக்கோவ் பதவியேற்றது முதல் ஒரு 'புதிய ஆரோக்கியமான வெளியுறவுக் கொள்கையை வகுத்ததன் மூலம் மேலை நாடுகளின் ஆதிக்கத்துக்குச் சவால்விடும் நிலையை தோற்றுவித்தார். அதுவே அவரது பதவி நீக்கத்துக்குக் காரணமாய் அமைந்து விட்டது என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ரஷ்யாவில் கடந்த 18 மாதங்களில் பிரதமரை அதிபர் பதவி நீக்கம் செய்திருப்பது இது மூன்றாவது தடவை ஆகும்.

இதேவேளை — அதிபர் யெல்ட்சின் மீதான குற்ற விசாரணைப் பிரேரணையை டுமா நேற்று விவாதிக்கத் தொடங்கியது.

(ஐ-6)

# காங்கிரஸ் - அ.தி.மு.க தேர்தல் கூட்டு உறுதி

சென்னை, மே 14

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமிழ் நாட்டில் காங்கிரஸும் அ.தி.மு.கவும் தேர்தல் கூட்டணி ஒன்றை அமைக்கும் என்பது உறுதியாகி விட்டது.

தேர்தல் கூட்டணி தொடர்பான பேச்சுக்கள் சென்னையில் உள்ள 'போயர்ஸ் கார்டன்' இல்லத்தில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சரத்பவாருக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையில் நடைபெற்றன.

பேச்சுக்களின் பின் செய்தியாளர்களிடம் பேசிய சரத்பவார் இரு கட்சிகளும் ஒன்றாகப் பணியாற்ற முடியும் என்ற முடிவுக்கு தாங்கள் வந்ததாகவும் —

தேர்தல் தொகுதிப் பங்கீடு குறித்து விவாதிக்கவில்லை என்றும்—

இது குறித்த பேச்சு நடத்துவதற்கு இன்னும் இரண்டு அல்லது மூன்று சந்திப்புக்கள் தேவை எனவே கட்சியின் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் ஒரு வாரத்தில் தாம் மீண்டும் சென்னை வரவிருப்பதாகவும் —

அவர் தெரிவித்தார்.

தமிழ் மாநிலக் காங்கிரஸ் மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கு வருவதை வரவேற்கின்றோம் என்றும் சரத்பவார் தெரிவித்தார். (ஐ 6)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட்

# இலங்கை - இங்கிலாந்து அணிகள் இன்று களத்தில்

லண்டன், மே 14

12 நாடுகள் பங்கேற்கும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இன்று இங்கிலாந்தில் கோலாகலமாக ஆரம்பமாகின்றது

இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 4.30 மணிக்கு 'லோட்ஸ்' (Lord's) மைதானத்தில் ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் போட்டிகளை நடத்தும் இங்கிலாந்தும் தற்போதைய உலகச் சம்பியனான இலங்கை அணியும் மோதவுள்ளன

இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் 12 நாடுகளின் அணிகள் களத்தில் உள்ளன. இவற்றில் 9 அணிகள் 'டெஸ்ட்' அந்தஸ்துப் பெற்றவை ஏனைய மூன்று அணிகளுக்கும் இதுவரை டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்படவில்லை.

முதற் சுற்றுப் போட்டிகள் லீக் முறையில் நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் உள்ள 6 அணிகளும் தமக்கிடையில் 5 தடவைகள் மோதும். இறுதியில் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் முன்னணியில் உள்ள மூன்று அணிகள் இரண்டாவது சுற்றுப் போட்டிக்குத் தெரிவாகும்.

அரையிறுதிப் போட்டிகள் ஜூன் மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளிலும் இறுதிப் போட்டி ஜூன் 20 ஆம் திகதியும் நடைபெறும்.

இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி [illegible] உலகக் கிண்ணத்தைக் [illegible]ளும்.

(ஐ-6)

# முதற் சுற்று ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள்

லண்டன், மே 14

இன்று ஆரம்பமாகும் 7 ஆவது உலகக்கிண்ண கிரிக்கட் போட்டியின் முதற்சுற்று ஆட்டங்களில் மே 24 ஆம் திகதி வரை பங்கு கொள்ளும் அணிகளின் விபரங்களும் ஆட்டம் நடைபெறும் மைதானங்களின் விவரமும் வருமாறு:-

★ மே 14 — இங்கிலாந்து எதிர் இலங்கை (லேட்ஸ்)
★ மே 15 — இந்தியா எதிர் தெ. ஆபிரிக்கா (ஹோவ்)
★ மே 15 — சிம்பாப்வே எதிர் கென்யா (டோடன்)
★ மே 16 — ஆஸ்திரேலியா எதிர் ஸ்கொட்லந்து (வோசெஸ்ரர்)
★ மே 16 — மே. இந்தியத்தீவுகள் எதிர் பாகிஸ்தான் (பிறிஸ்ரல்)
★ மே 17 — நியூஸிலாந்து எதிர் பங்களாதேஷ் (சில்ப்ஸ் போர்ட்)
★ மே 18 — இங்கிலாந்து எதிர் கென்யா (கன்ரபரி)
★ மே 19 — இலங்கை எதிர் தெ. ஆபிரிக்கா (நோர்த்தம்டன்)
★ மே 19 — இந்தியா எதிர் சிம்பாப்வே (லீசெஸ்ரர்)
★ மே 20 — ஆஸ்திரேலியா எதிர் நியூஸிலாந்து (கார்டீவ்)
★ மே 20 — பாகிஸ்தான் எதிர் ஸ்கொட்லாந்து (செஸ்ரர் லீ செஸ்)
★ மே 21 — மே. இந்தியத் தீவுகள் எதிர் பங்களாதேஷ் (டப்ளின்)
★ மே 22 — சிம்பாப்வே எதிர் இலங்கை (வோசெஸ்ரர்)
★ மே 22 — இங்கிலாந்து எதிர் தெ. ஆபிரிக்கா (க ஓவல்)
★ மே 23 — ஆஸ்திரேலியா எதிர் பாகிஸ்தான் (ஹெடிங்லி)
★ மே 23 — கென்யா எதிர் இந்தியா (பிரிஸ்டல்)
★ மே 24 — மே. இந்தியத் தீவுகள் எதிர் நியூஸிலாந்து (சவுத்தம்டன்)
★ மே 24 — ஸ்கொட்லாந்து எதிர் பங்களாதேஷ் (எடின் போர்க்)

[ஐ 9]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

பலாலி றோட் திருநெல்வேலி வளாக வீதியில் 2 பரப்புக் காணி, வீடு விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் திருமதி பாலசுப்பிரமணியம் சரஸ்வதி வளாக வீதி, திருநெல்வேலி என்னும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். (65705)

### தவறிவிட்டது

பூநாறி மரத்தடியைச் சேர்ந்த நடேஸ் லோகேஸ்வரன் என்பவரின் விசேட அடையாள அட்டையும் திறப்புக் கோர்வையும் மதவடி ஒழுங்கைக்கும் காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடிக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தம்பையா நடேஸ் 594/3, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (65704)

D L 198970 இலக்கமுடைய வாகன லைசன்ஸ் புத்தகமும் சில ஆவணங்களும் K K S. வீதியில் தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் 43, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். (65711)

### விற்பனைக்கு

பூச்சாடிகளும் பூங்கன்றுகளும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S பாக்கியநாதன் 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (65697)

றங்கூன் தேக்கினால் செய்யப்பட்ட அலுமாரியும், பால் எடுக்கும் மடிசெவி, பிரண்ட செவி, ஆரம் கொண்ட ஜமுனாபாரி ஆடுகளும் கடாக் குட்டிகளும், மறிக்குட்டிகளும், இறைச்சிக்குகந்த வான்கோழிகளும் முட்டை இடும் வெள்ளை வான்கோழிகளும் வெள்ளை, புள்ளி கினிக்கோழிகளும் முட்டைகளும், குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மதுரா, 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [65710]

### தங்குமிட வசதி

பெரிய வீட்டில் ஒரு பகுதியில் கௌரவமான சிறு குடும்பத்தினர் அல்லது மாணவிகள் இருவருக்கு தங்குமிட வசதியுண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். ஏனைய விடயங்களில் கூடிய சலுகைகள் காட்டப்படும். 71/10, சீனியர்லேன், கலட்டி அம்மன் கோயிலடி, வண்ணார்பண்ணை. (கிராம அலுவலர் அலுவலகத்திற்கு முன்பாக) (65622)

### திருத்துதல்

சகல கமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஷ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி), கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில். [65655]

## அ. அட்டைகள் வந்தன

நாவலி, மே 14

யாழ். ஆள் பதிவுத்திணைக்களத்திற்கு வந்து சேர்ந்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன (ஐ 100)

## வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம்

நீர்வேலி

## தலைமைக்கந்தோர் கூரைத்திருத்தம்

மேற்படி சங்கத்தின் தலைமைக் கந்தோரின் கூரைத்திருத்தம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட கட்டட வேலை ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறித்த வேலைகளுக்கான கேள்வி விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமைக் கந்தோரில் அலுவலக நாள்களில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை 31—05—99 பிற்பகல் 2.00 மணிக்கு முன் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ ''பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி ப நோ. கூ. சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப தபால் உறையின் இடது பக்கத்தில் ''தலைமைக் கந்தோர் கூரைத்திருத்தம்'' என எழுதப்படல் வேண்டும். செய்யப்பட வேண்டிய திருத்த வேலைகளை அலுவலக நேரத்தில் வந்து பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்

நீர்வேலி.
1999—05—11

(சி/ 7529)

## தேவை

தொலைத்தொடர்பு நிலையத்தில் பணிபுரியக் கூடியவரும், கம்பியூட்டர் இயக்க, ஆங்கில அறிவும் அனுபவமுள்ளவரும தேவை. (ஒரு மாத கம்பியூட்டர் பயிற்சி வழங்கப்படும்) இருபாலாரும் நேரில் உடன் தொடர்பு கொள்ளவும். தங்குமிட வசதியும் வழங்கப்படும்.

**NADES LADIES HOSTEL**
**BABU COMMUNICATION**
30, Campus Lane,
Thirunelvely. (65716)

## வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் கடந்த 9 வருடங்கள் கணித பாட ஆசிரியராகச் சேவையாற்றியதுடன் பாடசாலை நிர்வாகத்தில் பல வகையிலும் ஒத்துழைத்த

### திரு. வீரகத்தி கணேஸ்வரன்

அவர்கள் யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு திட்டமிடல் உதவியாளராக இடமாற்றம் பெற்றுள்ளார். இவரை மனதார வாழ்த்துவதில் யா/ அத்தியார் இந்துக்கல்லூரி பெருமை அடைகின்றது.

ஆசிரியர் கழகம்,
யா/அத்தியார் இந்துக்கல்லூரி,
நீர்வேலி.

(65729)

## பாராட்டுகின்றோம்

இன்று! 14—05—99 வெள்ளிக்கிழமை
கலாநிதி திரு. நா. தணிகாசலம்பிள்ளை
(யாழ். வலயம் 1 கல்விப்பணிப்பாளர்)

அவர்களால் இரு சென். ஜேம்ஸ் பாடசாலை (ஆண்கள் பெண்கள்) மாணவர்களும் இணைந்து ஆரம்பிக்கின்றன. G. C. E. [A/L] வகுப்பின் அங்குரார்ப்பணத்திற்காக அரும்பாடுபட்டு உழைத்த யாழ் / சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர்

### திரு. எஸ். எஸ். தங்கராஜா

அவர்களின் பெருந்தன்மையை மனமாரப் பாராட்டுகின்றோம்.

பாடசாலை நலன்விரும்பிகள்,
யாழ் / சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம்.
(ஆண்கள்)

(65725)

# ஸ்ரீகதிரமலைச் சிவன் தேவஸ்தானம்

சுன்னாகம்

# தேர்த் திருவிழா 14 - 05 - 1999

சிவ வழிபாடும் தமிழ்க்கலாசாரமும் புராதனமாகவே நிறைந்து சிறப்புறும் சுன்னாகம் நகரில் உயரமுடையதாகியும் மாமன்னர் உக்கிரராஜனால் வழிபாடியற்றிய வரலாற்றுச் சிறப்புடையதாயும் உள்ள கதிரமலை என்னும் க்ஷேத்திரத்தில் அருள்பாலித்து வரும் ஸ்ரீ சுவர்ணாம்பிகை சமேத பொன்னம்பலவாண சுவாமிக்கு நடைபெறும் வருடாந்த மகோற்சவத்தில் இன்று அருள்பொலிவு தரும் தேர்த்திருவிழாக் காட்சி ஆகும். காலை 9 மணிக்கு அழகிய சித்திரத்தேரில் இந்திராதி தேவர் முதல் முசுகுந்த ராஜாவரை ஆராதித்துயர்வு பெற்ற ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தி, விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர் சகிதம் மூன்று தேர்களில் உலாவரும் காட்சி அனைவருக்கும் இன்பம் தருவதாகும். இந்நாளில் வழிபாடியற்றி அருள்பெறுமாறு வேண்டி



அனைத்து மக்களுக்கும் சகல செல்வங்களும் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகிறோம்.

சுபம்.

சிவாகம கலாநிதி
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
ஸ்ரீ கதிரமலைச்சிவன்
தேவஸ்தானம்
சுன்னாகம்

அன்பே சிவம்—
அறிவின் வடிவமே சிவம்
இன்பமே சிவம்—
என்றும் உள்ளது சிவம்
சிவமே எங்கும்—
நிறைந்திருந்தாரே.

| | | | |
|---|---|---|---|
| **சுப்பிரமணியம் புத்தகசாலை**<br>யாழ்ப்பாணம். | **சிறிகரன் புத்தக நிலையம்**<br>புகையிரதநிலைய வீதி, சுன்னாகம். | **மொடேர்ன் ஸ்ரோர்ஸ்**<br>பஸ்நிலையம், நெல்லியடி. | **ஸ்ரார் கல்வி நிலையம்**<br>சிவன்வீதி, சுன்னாகம். |
| **செந்தூரன் கோப்பி & கூல்பார்**<br>டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். | **புதிய சோதி நகைத் தொழிலகம்**<br>64, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். | **செனித் வாச் வேக்ஸ்**<br>இல. 1, கே. கே. எஸ். ரோட், சுன்னாகம். | **சிங்கம் இன்டஸ்ரீஸ்**<br>290, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |

(சி/7526)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிகளை மயக்கித் திருட்டு

வடமராட்சிப் பகுதியில, சில இடங்களில் கோழிகளைத் திருடும் திருடர்கள புதிய யுக்திகளைக் கையாளுகின்றனர்.

கசிப்பில் ஊற வைத்த அரிசியைக் கோழிகளுக்கு தீனியாகப் போடும் திருடர்கள் கோழிகள் சில நிமிடத்தில் மயங்கி வீழ்ந்ததும் அவற்றை அபகரித்துக் கொண்டு தலைமறைவாகின்றனர் எனத் தெரிய வருகின்றது. (ஐ - 109

## ஆண்டு விழா

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய ஜெற்லைனேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 29 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நிலையத் தலைவர் பரா. சாந்தகுமார் தலைமையில் நடைபெறும்.

விழாவில் யாழ். மாநகர பொது சுகாதார பரிசோதகர் பொ. சிவப்பிரகாசம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தைச் சேர்ந்த பொ. பாலகிருஷ்ணன், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் ஆ.சோதிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

யாழ். மாவட்ட ரீதியாக கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட 7 பேர் கொண்ட 12 ஓவர் மென்பந்து கிறிக்கற் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் அன்றைய தினம் இடம் பெறும்.

இப் போட்டியில் சென்றலைட்ஸ் வி. க. அணியை எதிர்த்து ஜெற்லைனேர்ஸ் வி. க. அணி விளையாடும்.

தொடர்ந்து பிற்பகல் 6,30 மணிக்கு பரிசளிப்பு வைபவம் இடம்பெறும். [ஐ-17]

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 14

ஊரெழுவைச் சேர்ந்த அமரர் சிவஸ்ரீ பால. வைத்தியநாதக் குருக்களின் ஓராண்டு ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் 'ஸ்ரீமகோற்ஸவ பத்ததி' என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ப. கோபால கிருஸ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் மங்கள விளக்கினை சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் ஏற்றிவைப்பார். வேதபாராயணத்தை பிரம்மஸ்ரீ ப. சோமசுந்தர சர்மாவும், திருமுறை பாராயணத்தை பிரம்மஸ்ரீ ப. சோமகலாதரசர்மாவும், வைத்தியநாத அஞ்சலியை பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயரும், வரவேற்புரையை சிவஸ்ரீ வை. தியாகராஜக் குருக்களும், ஆசியுரையை மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்களும் மற்றும் சிவஸ்ரீ. கி. சோமசுந்தரக்குருக்களும் நிகழ்த்துவர். வாழ்த்துரையை சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள். பிரம்மஸ்ரீ ஸ்ரீ. கிருஸ்ணானந்த சாமா ஆகியோர் வழங்குவர்.

நூல் அறிமுகவுரையை சிவஸ்ரீ பா. சர்வேஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார்.

மேற்படி நூலை சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள வெளியிட்டுவைக்க சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக்குருக்கள் நூலின் முதற்பிரதியைப்பெற்றுக்கொள்வார் (ஐ-7)

### வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள

# கூட்டுறவுச் சங்கங்களின் தரத்தை மேம்படுத்த செயற்றிட்டம் அமுலுக்கு

அரியாலை, மே 14

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான (அபிவிருத்தி) செயற்றிட்டம் ஒன்று நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் இது தொடர்பான விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த செயற்றிட்டம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் அடுத்தாண்டு மே மாதத்திற்குள் நடைமுறைப்படுத்தி முடிக்கப்படும்.

செயற்றிட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களினதும் தற்போதைய நிலை மதிப்பிடப்படும்.

இந்த மதிப்பீட்டு ஆய்வு நடவடிக்கைகளைகூட்டுறவுத் திணைக்கள கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸத்தர்கள மேற்கொள்வார்கள்.

மதிப்பீடுகளை மேற்கொள்ளும் சங்கங்கள் பின்னர் ஏ. பீ. சீ. டி. ஆகிய நான்கு வகுப்புக்களாக (தரம்) பிரிக்கப்படும்.

மேற்படி வகுப்புக்களுக்குள் அடங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தமது செயற்றிட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிலைக்கு ஏற்ப முதற் தரத்திற்கு உயர வாய்ப்பு உண்டு.

இவ்வாறு சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

இந்த சுற்றறிக்கைக்கு ஏற்ப யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை மதிப்பீடு செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கூட்டுறவுத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர்கள் இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-17)

## பட்டதாரி கிராம அலுவலர் விவரங்கள் சேகரிப்பு

வலி. மேற்கு. மே 14

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பட்டதாரி கிராம உத்தியோகத்தர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு பட்டதாரி கிராம உத்தியோகத்தர்களின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு கோரி கடிதம் அனுப்பியதைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் இது தொடர்பாக சகல பிரதேச செயலர்களுக்கும் சுற்றறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

(ஐ-175)

### வேலைகள் முடிவடைந்தும்

## அராலி வடக்குப் பகுதிக்கு நீர் விநியோகம் இல்லை

அராலி வடக்குப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுவதில்லை.

அராலி வடக்கு கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு குடி தண்ணீர் விநியோகத்துக்குரிய சகல வேலைகளையும் ஜீ. ரீ. இசற் நிறுவனம் பொறுப்பேற்று கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையிலும் இதுவரை குடி தண்ணீர் விநியோகம் மேற்கொளளப்படவில்லை.

குடி தண்ணீர் விநியோகத்தை மிக விரைவில் விநியோகிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ-175)

## விஞ்ஞானக் கருத்தரங்கு

ஜீ. சீ. ஈ (உயர்தரம்)வகுப்பில உயிரியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உயிரியல் விஞ்ஞானத்தின் புதிய பாடத்திட்டம் தொடர்பாக விளக்கும் கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும் எதிர்வரும் 22 ஆம் 23ஆம்திகதிகளிலும் யாழ். விஞ்ஞான சங்கத் தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் யாழ். கல்வித் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது

யாழ் கல்வித் திணைக்களம் யாழ் விஞ்ஞான சங்கத்துடன் இணைந்து நடத்தும் இந்தக் கருத்தரங்கில் உயிரியல் விஞ்ஞானத்தில் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய ஏற்பட்ட மாற்றங்கள், பாட விதானம், போதனை முறைகள் என்பன குறித்து யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் விளக்கமளிக்க உள்ளனர்.

இதேவேளை—

பௌதிக விஞ்ஞானத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து ஆசிரியர்களுக்கு விளக்கும் கருத்தரங்கு ஒன்று ஜூன் மாதத்தில் நடைபெறவுள்ளது

[ஐ-6]

## பண்டித வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்படும் பிரவேசபால பண்டித வகுப்புகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

புதிதாகச் சேர விரும்பும் மாணவர்கள் அன்றையதினம் காலை 8.30 மணிக்குச் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

99 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பிரவேச பண்டித பரீட்சைப் பெறுபேறுகள் இம் மாதம் 27ஆம் திகதி வெளிவரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-ரி)

### மாத்தறை பஸ்ஸில் சென்ற

## கான்ஸ்டபிளிடம் இருந்து 139 ரவைகள் மீட்பு

கொழும்பு, மே 14

கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கிச் சென்ற பஸ்ஸில் பயணம் செய்தபொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரிடமிருந்து 139ரவைகளைப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளதாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி கான்ஸ்டபிளின் பயணப் பையில் காணப்பட்ட கடிதங்கள் புலிகளுடன் தொடர்புடையவையாக இருக்கலாம் என வெலிகம பொலீஸார் சந்தேகிப்பதாகவும் —

கான்ஸ்டபிளுடன் பயணம் செய்த தமிழர் ஒருவரைப் பொலீஸார் [illegible] செய்து வருவதாகவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

### நெல்லியடியில் இயங்கிய

## ஜெனரேற்றர் மூலம் மந்திகைப் பகுதிக்கு மின்

நெல்லியடி, மே 14

மந்திகை ஆஸ்பத்திரி வளாகத்தில் 29 கே. வி மின் வலு கொண்ட ஜெனரேற்றர் இன்று புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த ஜெனரேற்றரில் இருந்து முதற் கட்டமாக நேற்று முன்தினமிரவு 7 மணி முதல் புலோலியில் உள்ள உபய கதிர்காமம் பகுதிக்கு மின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

பிரதேச மின் பொறியியலாளர் இ. வல்லிபுரம், மத்திய மின் நிலையப் பொறியியலாளர் எஸ். சண்முகநாதன் மின் அத்தியட்சகர் ச. இராசலிங்கம் ஆகியோர் ஜெனரேற்றரை இயக்கி மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தனர்.

மேற்படி ஜெனரேற்றர் முன்பு நெல்லியடிப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்தது. எனினும் நெல்லியடிப் பகுதிக்கு 24 மணி நேர மின் விநியோகம் இலங்கை மின்சார சபையால் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து இந்த ஜெனரேற்றர் மந்திகைக்கு மாற்றப்பட்டது.

இந்த ஜெனரேற்றர் மூலம் மாலுசந்தி, காந்தி கிராமம், கொடிகாமம் வீதி ஆகிய பகுதிகளுக்கும் தொடர்ந்து மின் வழங்குவதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜெனரேற்றர் மந்திகையில் பொருத்தப்பட்டதை அடுத்து இதுவரை மந்திகையில் செயற்பட்டு வந்த ஜெனரேற்றர் மூலம் இனிமேல் மந்திகை ஆஸ்பத்திரிக்கு மட்டுமே மின் வழங்கப்படும்.

(ஐ-6-109-173)

## மெய்வல்லுநர் போட்டி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் உடலாண்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலாசாலை மைதானத்தில் நடைபெறும்.

கலாசாலை அதிபர் இ. பரம்சோதி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு வைத்திய கலாநிதி வை. தியாகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-17)

திருமறைக் கலாமன்றம்

**கவின் கலைகள் பயிலகம்**

**School of Fine Arts**

பின்வரும் பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகளில் பயில்வதற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. நடனம் 2. வாய்ப்பாட்டு
3. மிருதங்கம் 4. வயலின்
5. வீணை 6 சித்திரம்
7. ஓர்கன்

விண்ணப்பப் படிவங்களை நேரடியாக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15 - 05 - 99

பொறுப்பாளர்
கவின் கலைகள் பயிலகம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[ சி/7525 ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 MAY 1999

# தமிழ் - 2001 - A|L ஆரம்பம்

விக்னா — யாழ் நகர் மு. ப. 9. மணி நாளை
வினைஸ் — சுன்னாகம் பி. ப. 2. மணி ,,
சைன் — உடுவில் பி. ப. 5. மணி ,,

மாவை - V. M. லிங்கம்

(65647)

# அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு பிற்போடல்

யா/ யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் **16 - 05 - 1999** ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது; நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.

க. செ. சத்தியமூர்த்தி,
செயலாளர்,
**யா/ யூனியன் கல்லூரி ப. மா. ச.**

(65708)

# இலவச மருத்துவ பரிசோதனை

**இடம்:** பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை.
**திகதி:** 16—05 1999
**நாள்:** ஞாயிற்க்கிழமை
**நேரம்:** முற்பகல் 9-30 மணி

**கண்பரிசோதனை:**
S. M. Fernando சகோதரர்

**மருத்துவ பரிசோதனை:**
Dr. T. அருமைத்துரை,
Dr. K. சிவனடியான்,
Dr. S. சுந்தரராஜன்

பரிசோதனை செய்ய விரும்புவோர் 15—05—99 அன்று பாடசாலையில் பதிவு செய்யவும்.

**செயலாளர்,**
மானிப்பாய் கோவில்பற்று.
லயன்ஸ் கழகம்.

(சி/ 7515)

# ஈராண்டு நினைவலைகள்



தோற்றம் 24 — 04 — 1974
மறைவு 14 — 05 — 1997

அமரர்

## செல்வராசா சிறீகரன்

மறந்திருந்தோம் அல்லோம் ஈராண்டாய் உம் வதனம்
நினைந்து நினைந்து நிலை குலைந்து வாடுகிறோம்
கிளி தனை வளர்த்துப் பூனை கையிற் கொடுத்த நாம்
நிலைகுலைந்து தவிக்கின்றோம் நிற்கதியாயுமை
நினைந்து.

உம்பிரிவால் துயருறும்!
தந்தை: **செல்வராசா,**
தாய்: **கிருபைவரம்,**
அண்ணன்: **கிருபாகரன் குடும்பம்,**
அக்கா: **பிரீதினி குடும்பம்,**
அண்ணன்: **செல்வாகரன் குடும்பம்,**
மாமி: **அரியமலர் குடும்பம்,**
மைத்துனி: **ஜெயந்தினி குடும்பம்.**

உசன்,
மிருசுவில்.

[65661]

# முதலாம் ஆண்டுப் பரீட்சை

வலி. தென்மேற்கு மே 14

பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி மாணவர்களுக்கான முதலாம் ஆண்டுப் பரீட்சை ஜூன் மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகும் என யாழ். திறந்த பல்கலைக் கழக பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்தார். (ஐ-185)

# கல்வியங்காட்டில் நாணயக்குற்றி தொலைபேசி

யாழ்ப்பாணம், மே 14

கல்வியங்காடு பொதுச் சந்தைக்கு அண்மையில் அமைந்துள்ள வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தில் நாணயக் குற்றி மூலம் செயற்படும் தொலைபேசி ஒன்று கடந்த திங்கட்கிழமை முதல் பொருத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வசதி கருதி மன்றத்தின் புதிய நிர்வாகிகள் விடுத்த கோரிக்கையை அடுத்து ரெலிக்கொம் நிறுவனம் இந்ததொலைபேசியை அங்கு பொருத்தியுள்ளது. (ஐ-103)

# விவரம் சேகரிப்பு

வலி.மேற்கு, மே 14

உலக உணவுத்திட்ட நிறுவனம் யாழ். மாவட்டத்தில் முகாம்களில் தங்கியுள்ளவர்களின் விவரங்களைத் திரட்டி வருகிறது. (ஐ-175)

# சாரணர் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், மே 14

பாடசாலைகளின் சாரண அணித் தலைவர்களுக்கான மூன்று நாள் பயிற்சிகள் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் கைதடி நவீல்ட் பாடசாலையில் பயிற்சித் தலைவர் பு. இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்புக்களில் பாடசாலை சாரணர் அணித் தலைவர்களைக் கலந்து கொள்ளுமாறு சாரணர் மாவட்ட ஆணையாளர் எம். புவனேந்திரன் கேட்டுள்ளார். (ஐ-6)

# தேவை

நல்ல நிலையில் உள்ள கடைக்குரிய இரும்பு சுருக்குக் கதவு தேவை. (அகலம் 10 அடிக்குக் குறையாமல்) வைத்திருப்போர் கீழ்க்காணும் முகவரியுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

**பு. ஜெயம்**
14, குறோசற் ஒழுங்கை,
(நல்லூர் தெற்கு சன சமூக நிலையம் அருகில்)
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(65685)

# விற்பனைக்கு

செவ்வரத்தை, குறோட்டன் பாம்ஸ், எக்சோறா கன்றுகளும், சைப்பிரஸ் குறோட்டன், பாம்ஸ் முதலியன சாடிகளுடனும் விற்பனைக்குண்டு. மற்றும் பலவகையான பூச்சாடிகளும் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகக் கொள்வனவு செய்தால் விசேட கழிவு வழங்கப்படும்.

[illegible]
[illegible] கோவில் வீதி,
**யாழ்ப்பாணம்.**

(65696)

# யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும்

**காலம்:** 29 - 05 - 1999 **சனிக்கிழமை காலை 9 மணி**
**இடம்:** **யா/யூனியன் கல்லூரி வளாகம்**
(மருதனார்மடம்)

**தலைவர்:** சி. விக்கினராஜா

காலை தொடங்கி மாலைவரை முழுநேர நிகழ்ச்சியாக நடைபெறும்; அத்தருணம் சகல அங்கத்தவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

பிற் குறிப்பு:
1) 28 - 05 - 1999 -க்கு முன்பாக பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
2) ஆயுட்கால அங்கத்தினர் தமது தற்போதைய முகவரியை உடன் அறியத்தரவும்.
3) இதுவரையும் இணைந்துகொள்ளாத பழைய மாணவர்களை சங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.
4) 1996 — 1997 ஆம் வருட கல்வியாண்டில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட யா / யூனியன் கல்லூரி பழைய மாணவர்கள் உடன் தமது விவரத்தை அறியத்தரவும்.

செயலாளர்
**யா / யூனியன் கல்லூரி ப. மா. ச.**

(65707)

உ
ஓம் சரவணபவ
தென்மட்டுவில் - வேரற்கேணி

# கருணைமிகு ஸ்ரீகந்தசுவாமி திருக்கோயில்

சாவித்திர திவ்ய

## மஹோற்சவ பெருவிழா - 99

**கொடியேற்றம்:** வைகாசி 1ஆம் நாள் (15-05-99) சனிக்கிழமை பகல் 11.00 மணி
**வேட்டைத் திருவிழா;** வைகாசி 8ஆம் நாள் (22-05-99) சனிக்கிழமை மாலை 3.00 மணி
**சப்பறத் திருவிழா:** வைகாசி 13ஆம் நாள் (27-05-99) வியாழக்கிழமை மாலை 5 மணி
**தேர்த் திருவிழா:** வைகாசி 14 ஆம் நாள் (28-05-99) வெள்ளிக்கிழமை காலை 10 மணி
**தீர்த்தத் திருவிழா:** வைகாசி 15ஆம் நாள் (29-05-99) சனிக்கிழமை காலை 10-00 மணி
**திருக்கல்யாணம்:** வைகாசி 16ஆம் நாள் (30-05-99) ஞாயிற்றுக்கிழமை மாலை 8.00 மணி

தினமும் பகற் திருவிழா காலை 8-30 மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 3-00 மணிக்கும் ஆரம்பமாகும்.

அடியார்கள் யாவரும் வந்து தரிசித்து கந்தனின் திருவருள் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டுகிறோம்.

பிரதம குரு: சிவாகம கிரியா தத்துவநிதி
**சிவப்பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள்**

சுபம்.

கந்தன் திருப்பணியில்
தர்ம பரிபாலன சபை.

தென்மட்டுவில்,
சாவகச்சேரி.

(65709)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 14 — 03 — 1932
மறைவு 15 — 04 — 1999

அமரர்

## கந்தையா சரவணமுத்து

எமது குடும்பத்தலைவரின் மரணச் சடங்கில் பங்கு பற்றி எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றி தெரிவித்து நாளை (15 - 05 - 99) சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இடைக்காடு,
அச்சுவேலி.

(65706)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நல்ல திருப்பம்

யாழ்ப்பாண நகரில் உள்ள பாடசாலைகள் மற்றும் வலிகாமம் பிரதேசம் முழுவதிலும் உள்ள பாடசாலைகளைச்சேர்ந்த மாணவர்கள் மூன்று நாள்கள் வகுப்புகளை முற்றாகப் பகிஷ்கரித்த பின்னர் நேற்றுப் பாடசாலைகளுக்குச் சென்றனர்.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் (ஸ்ரான்லிக் கல்லூரியின்) சிரேஷ்ட துணை மாணவ முதல்வன் த. சிவரூபன் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் படையினரால் தடுத்து வைக்கப்பட்ட விவகாரத்தினால் குடாநாட்டுப் பாடசாலைகள் இயங்க முடியாதநிலை உருவாகுமோ என்ற அச்சமும் கவலையும் நீங்கியுள்ளது.

பெற்றோர்களும், மாணவர்களும், அதிபர் - ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் வகுப்புப் பகிஷ்கரிப்பு நீடிக்காமல் முடிவுற்றது குறித்து மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மாணவர்களின் ஆட்சேப இயக்கம் நீடிக்காமல் நிறுத்துவதில் இராணுவ அதிகாரிகள் புத்திசாதுரியமாகவும் சமயோசிதமாகவும் செயற்பட்டதால், குடாநாட்டின் கல்வி போதனை பாதிக்கப்படாமல் தவிர்க்கப்பட்டது.

மாணவர் ஆட்சேப இயக்கத்தினால் உண்டாகக்கூடிய பாரதூரமான விளைவுகளை உணர்ந்து, சம்பந்தப்பட்ட கல்வித் துறையினரின் விளக்கங்களை உள்வாங்கி, படை உயர் அதிகாரிகள் இவ்வாறு செயற்பட்டது ஒரு வகை அமுக்கத்திலிருந்து குடாநாட்டை விடுவித்துள்ளது.

மாணவர்களின் ஆட்சேப இயக்கம் பெரும் பயன் தந்துள்ளது என்பதனையும் இங்கு விசேடமாகக் குறிப்பிட்டாக வேண்டும். மக்கள் மீளக் குடியமர்ந்துசரியாக மூன்று வருடங்களின் பின்னர் அநியாயத்துக்கு எதிராகக் குரல் கொடுத்து வெற்றி கண்ட நிகழ்வாகவும் இதனை நோக்கலாம் - கருதலாம்.

பாதுகாப்பு, பாதுகாப்புக் காரணம் என்ற பெயரால் அப்பாவிகளைக் கைது செய்வது, தடுத்து வைப்பது, இம்சைப்படுத்துவது ஆகிய நடவடிக்கைகள் அரசாங்கத்துக்கும், படைகளுக்கும் எதிரான ஓர் உணர்வை உண்டாக்கும் என்பதனை இராணுவ வட்டாரங்கள் இந் நிகழ்வின் மூலம் புரிந்திருக்கும் என நம்பலாம்.

பாடசாலைக்குஒழுங்காகச் சமுகமளித்து, கல்வியில் சிறந்து விளங்கிய மாணவனைத் தடுத்து வைப்பதற்கு முன்னர், கல்விப் பணிப்பாளர் அல்லது அதிபரிடம் விவரம் கேட்டிருந்தால் இத்தனை பாதிப்புகளையும் தவிர்த்திருக்கலாம்.

மாணவர் சக்தியைக் குறைத்து மதிப்பிடுவதோ அவர்களின் கல்வி உரிமைகளை நசுக்குவதோ. கல்வி போதனைகளைக் குந்தகம் விளைவிப்பதோ விரும்பத்தக்கதல்ல; குடாநாட்டைப் பொறுத்தவரையில், கல்வியைப்பெரும் செல்வமாகக் கருதும் யாழ்ப்பாணத்தவர்களைப் பொறுத்தவரையில் அது உணர்வுகளைக் கிளறிவிடும், தூண்டிவிடும் என்பது புரிந்து கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

# அடியவர் உள்ளத்தைக் கவரும் அன்பு வடிவானவன் இறைவன்

ஒரு பொருளை எவரும் அறியாதபடி திருடுபவனைக் களவன் என்கிறோம், சோரன் என்கிறோம். உலகத்திலே கள்வர்கள் பலர் இருக்கிறார்கள் சமயமும் சந்தர்ப்பமும் சாதகமாக அமையும்போது தமக்கு வேண்டியவற்றைத் திருடிச்சென்று விடுவார்கள்.

கள்வர்கள் தமது நடவடிக்கைகளையோ, நடமாட்டங்களையோ பிறர் அறியாமல் இருப்பதற்குப் பல யுக்திகளைக் கையாளுவது உண்டு.

**ஞானக் கதிர்**

நல்லவர்கள் போல் வேடம் போடுவார்கள். நீதி நெறி தவறாதவர்கள் போல நடப்பார்கள். யாரும் அவர்களைக் கள்வர்கள் என்று கருதுவதில்லை, சந்தேகிப்பதில்லை. அவர்கள் நம்மிடையே நடமாடிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

வேறு ஒரு திருடன், அவன் எங்கும் நிறைந்திருக்கிறான். அவன் புறக்கண்களுக்குப் புலப்படமாட்டான். இவன், உலகில் ஜெனித்த எண்பத்து நான்கு நூறு ஆயிரம் பிறப்புப் பேதங்கள் ஒவ்வொன்றிலும் — அதாவது ஒவ்வொரு உயிரிலும் இரண்டறக்கலந்து ஒளித்திருக்கிறான்.

இந்தத் திருடன் என்ன பொருளைத் திருடினான்? எப்போ திருடினான்? இவன் காசு, பணம், பொருள் போன்ற எதையும் திருடுவதில்லை. திருடாதவனுக்குத் திருட்டுப்பட்டமா? இதென்ன அநியாயம் என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா? தம்முடைய ஒன்றைத் திருடக் கொடுத்துத் திகைத்து இளைத்தவருக்கு மட்டுமே புரியும் இரகசியம் அது. அந்த இரகசிய அனுபவத்தைப் பெற்றவர் ஒருவர் கூறுகிறார்.

"என்னுடைய உள்ளத்தைக் கவர்ந்து விட்டான்; அவன் நிச்சயமாகக் கள்வன் தான். சந்தேகம் இல்லை" என்று உறுதியுடன் பேசுகிறார் ஞானசம்பந்தப் பெருமான். திருடியவனுடைய அங்க அடையாளங்களைக் கூடத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"தோடுடைய செவியன், விடையேறி, ஓர் வெண்மதி சூடி, காடுடைய சுடலைப் பொடி பூசி, இவனே எனது உள்ளம் கவர்ந்த கள்வன்" என்று சீர்காழிப் பதியில் கோயில் கொண்டுள்ள தோணியப்பரைச் சுட்டிக் காட்டிப்பாடிய முதற் பதிகம் முழுவதிலும் சிவபிரானை உள்ளங்கவர் கள்வன் என்றே ஒவ்வொரு பாடலிலும் கூறுகிறார்.

இறைவனின் திருவுளப்படி வைகையில் வெள்ளம் பெருகியது. வீட்டுக்கு ஒருவராக அதன் கரையை உயர்த்தும்படி அரிமர்த்தன பாண்டியன் பறை அறைவித்தான். செம்மனச் செல்வியின் பங்கை உயர்த்தச் சொக்கலிங்கப் பெருமான் சென்றார். கூலியாகக் கிடைத்த 'பிட்டை' எடுத்து எடுத்து உண்பதும், ஆடுவதும், பாடுவதும், மணலில் படுப்பதுமாகக் காலங் கடத்தினார்.

அவருடைய ஆடல்களும், பாடல்களும் அரச அதிகாரிகளின் மனங்களைக் கவர்ந்து விட்டன. அவர்கள் வாளா இருந்தனர். அணையைப் பார்வையிட வந்த பாண்டியன் "உயர்த்தப்படாத இந்தப் பங்கு யாருடையது" என்று சீற்றத்துடன் கேட்டான். "இது செம்மனச் செல்வியின் பங்கு. அவர் ஓர் ஆளை அனுப்பினார். அவன்

**மூளாய் அருணாசலம்**

'வா' என்றால் போகிறான், 'போ' என்றால் வருகிறான். அதோ படுத்திருக்கிறான்" என்றார் ஓர் அதிகாரி.

மன்னனின் கோபத்தைக் கண்ட அதிகாரிகள் அச்சமடைந்து கூலியாளாக வந்த இறைவனை இழுத்துச்சென்று அவன் முன் விட்டனர். பரஞ்சோதி முனிவர் இந்தக் காட்சியை விவரிக்கின்றார்.

வள்ளல் தன் சீற்றங்கண்டு
மாறு கோல் கையர் அஞ்சி
தள்ளரும் சினத்தராகி
தடக்கை தொட்டு இழுத்து
வந்து
உன்னொடு புறம் கீழ்
மேலாய் உயிர் தொறும்
ஒளித்து நின்ற
கள்வனை இவன்தான்
வந்திக்கு ஆள் எனக் காட்டி
நின்றனர்.

"திருமால் கண்ணனாக அவதரித்த போது தயிர், வெண்ணெய் திருடினார். திருவீழிமிழலையில், சிவபிரானைத் தினமும் ஆயிரம் தாமரை மலர்களால் அர்ச்சிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார் திருமால். ஒரு தினம் ஒரு மலரை மறைத்துக் களவு செய்து விட்டார் சிவபிரான். ஆனால் இவர்களை விடப் பெண்ணைத் திருடிய நீதான் பெரிய திருடன்" என்று பாம்பன் அடிகள் முருகனை விளித்து நிந்தாஸ்துதி செய்கிறார்.

கோத்தயிர் வெண்ணெய்த்
திருடன் மால் மருகா, நறிய
பூத்திருடன் தன் மதலாய்
பொங்குகுறக் —
கோந்திருந்தோர்
பெண் திருடிச் சென்றபெரும்
திருடா, என் போதம்
உண்டு திருடத் தெரியாயோ.

முருகவேள் நள்ளிரவில் தாய் தந்தையர் அறியாமல் வள்ளிநாயகியாரைக் கவர்ந்து சென்றதால், அருணகிரிநாதரும் முருகனுக்குத் திருட்டுப் பட்டம் சூட்டி மன நிறைவு பெற்றார்.

செம்மான் மகளைத்
திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான்
இறவான்;
சும்மா இரு சொல் அற
என்றலுமே
அம்மா! பொருள் ஒன்றும்
அறிந்திலனே.
[கந்தர் அனுபூதி-பாடல் 12]

★

# 2 ஆயிரத்து 500 பொதிகளில் நல்லின விதை நெல் இங்கு வரும்

யாழ்ப்பாணம், மே 14

சுய விதைநெல் உற்பத்திக்காக இரண்டு கிலோ பொதிகளில் அடைக்கப்பட்ட நல்லின நெல் தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட உள்ளன.

விவசாய திணைக்களத் தலைமையகம் 'கெயர்' நிறுவனம் ஊடாக இந்த நெற் பொதிகளை கப்பல் மூலம் அனுப்பிவைக்கவுள்ளது.

இரண்டாயிரத்து 500 பொதிகளைக் கொண்ட 5 ஆயிரம் கிலோ நெல் இவ்வாறு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவுள்ள சுய விதை இனங்களின் விவரம் வருமாறு:-

★ பி. டபிள்யூ - 351 — 1,200 பக்கற்.

★ ஏ. ரி. 353 — 300 பக்கற்.

★ ஏ. ரி. 401 — 300 பக்கற்.

★ ஏ. ரி. 354 — 200 பக்கற்.

★ ஏ. ரி. 402 — 500 பக்கற்.

இந்த விதையினங்கள் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்படும் என்று விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர் த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

(ஐ.5 17)

## மணிக்கூடு, உண்டியல் ஆலயத்தில் திருட்டு

வலி. வடக்கு, மே 14

கொக்குவில் கிழக்கு தலையாளி ஞான வைரவர் ஆலயத்தில் நண்பகல் நேரம் மணிக்கூடு மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

ஆலய வாசலில் பொருத்தப்பட்டிருந்த சுவர் மணிக்கூடு மற்றும் உண்டியல் பெட்டி என்பனவே பகல் 2.00 மணிக்கும் 3.00 மணிக்கும் இடையில் திருடப்பட்டுள்ளன.

ஆலயத்தில் கடந்த வருட இறுதியிலும் சுவர் மணிக்கூடு உண்டியல் என்பன திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

[illegible] பொலீஸ் நிலையத்தில் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-86)

## நாளை

வைகாசி 01

சனிக்கிழமை

திதி: அமாவாசை மாலை 6.27 வரை.

நட்சத்திரம்: பரணி நண்பகல் 12.05 வரை;

கார்த்திகை, அமாவாசை விரதம்

சுபநேரம்: 2.53-4.23

ராகுகாலம்: 8.53-10.23

[பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

## உதயவாக்கு

உன் கடமைகளையெல்லாம் விடாது செய்துவா. ஆனாலும் உன் உள்ளத்தை இறைவன் பால் இருத்தி யாவருடனும் சேர்ந்து வாழ்ந்துவா.

— பரமஹம்சர்

## தமிழ்த்தின விழா

தீவுப்பகுதிக்கான தமிழ்த்தின விழா எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறும்.

உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். ஜெயராசசர்மா இதற்கான ஏற்பாடுகளைக் கவனித்துவருகின்றார்.

(ஐ-111)

## சைக்கிள் இலக்கத்தகடு பரிசோதனை

வலி. வடக்கு, மே 14

வலி. வடக்கு பிரதேச சபையினால் துவிச்சக்கர வண்டிகளுக்குரிய இவ்வாண்டுக்கான இலக்கத்தகடுகள் பரிசோதனை செய்யப்படுகின்றன.

முக்கிய சந்திகளில் பொலீசாரின் உதவியுடன், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் துவிச்சக்கரவண்டிகளை பரிசோதனை செய்து இலக்கத்தகடுகள் விநியோகம் செய்து வருகின்றனர்.

(ஐ-86)

## வைகாசிப் பெருவிழா

கொழும்புத்துறை, மே 14

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் வைகாசி மாதப் பெருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

தம்மை முற்று முழுதாக அர்ப்பணித்து சமய சமூகப் பணி ஆற்றி வரும் ஒருவருக்கு பேரவையினால் இவ்விழாவில் வைத்து விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாக பேரவையின் செயலாளர் ந. அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

## நெடுந்தீவில் நடமாடும் சேவை

நெடுந்தீவு, மே 14

தீவக வலயக் கல்வித் திணைக்களத்தின் நடமாடும் அலுவலகச் சேவை எதிர்வரும் திங்கட்கிழமை நெடுந்தீவில் இடம்பெறும்.

தீவக வலய நிர்வாக உத்தியோகத்தர் செ. மெற்றாஸ்மயில் தலைமையில் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நெடுந்தீவுக்குச் செல்லவுள்ளனர்.

(ஐ-111)

## உயர்தரப் பரீட்சை

கொழும்பு, மே 14

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 2 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

5 ஆம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 8 ஆம் திகதி நடைபெறும்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண பொதுச்சேவை பட்டதாரி பயிலுநர்
நேர்முகப் பரீட்சைக்குத்
தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான (33

## அவசர கலந்துரையாடல்

இடம்: புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி
காலம்: 14 - 05 - 1999 இன்று
வெள்ளிக்கிழமை ந.ப. 12-00 மணி
(புதிய நேரம்)

முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட உள்ளதால் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்.

(65722)

## 10 குடும்பங்களுக்கு வீடுகள்

காரைநகர், மே 14

காரைநகர் கிழக்குப் பகுதியில் போருப் சர்வதேச தொண்டர் நிறுவனம் மீளக் குடியமர்ந்த வீடுகளைப் பத்துத்துக் குடும்பங்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது. [ஐ 73)

## பாடசாலை ஓடு பிரித்து பொருள்கள் சூறை

வலி. வடக்கு, மே 14

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நேற்று முன்தினம் ஒலி பெருக்கிச் சாதனங்கள் உட்பட பல பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

இரவு நேரம் கூரை ஓட்டின் வழியாக இறங்கிய திருடர்கள் பாடசாலையில் உள்ள சில்வர்ப் பொருள்கள் மற்றும் மேடைத் திரைச்சீலை என்பவற்றையும் திருடிச் சென்றுள்ளனர்.

பாடசாலைக்கு அருகில் உள்ள கடையொன்றில் இருந்தும் பால்மா வகைகள்' சவர்க்காரம் மற்றும் ஆடம்பரப் பொருள்கள் உட்பட பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன

நான்கு மாதங்களுக்கு முவினரும் இப் பாடசாலையில் குழாய்க் கிணறுக்கான கருன் உட்பட பல பொருள்கள் திருடிச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ 86)

## பிற்போடப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவ மன்றத்தினால் 16–5–99 அன்று நடத்தப்பட இருந்த 'இன்னிசைத் தென்றல்' இசை நிகழ்ச்சி தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது.

இசைநிகழ்வின் காலத்தினைப் பின்னர்
அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
சித்தமருத்துவ மாணவ மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

[65727]

அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

# வருடாந்த மஹோற்சவம் - 1999

மேற்படி ஆலய மகோற்சவம் 20 — 05 — 1999 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 31—05—1999 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் பூர்த்தியாகும்.

### திருவிழா விஞ்ஞாபனம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொடியேற்றம்: | 20-05-1999 | வியாழக்கிழமை | காலை | 11 00 மணி | (பழைய நேரம்) |
| சப்பறத் திருவிழா: | 28-05-1999 | வெள்ளிக்கிழமை | மாலை | 4 00 மணி | (பழைய நேரம்) |
| தேர்த் திருவிழா: | 29-05-1999 | சனிக்கிழமை | காலை | 10 00 மணி | (பழைய நேரம்) |
| தீர்த்தத் திருவிழா: | 30-05-1999 | ஞாயிற்றுக்கிழமை | காலை | 9 00 மணி | (பழைய நேரம்) |

தினமும் மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை ''மகாபாரதம்'' எனும் பொருள் பற்றி சிவபதி பாலசர்வேஸ்வரக் குருக்கள் ( B A Hons ) அவர்களின் சொற்பொழிவு இடம்பெறும்.

விற்பனை நிலையங்கள் (கடைகள்) பெறவிரும்புவோர் 17—05—99க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். 19—05—99 ஆம் திகதி கடைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

மகோற்சவ காலத்தில் பாலர் கல்விச் சோலைக்கான மாபெரும் விற்பனை இடம்பெறும்.

தர்மகர்த்தாக்கள் சபை

கும்பழாவளை, அளவெட்டி. (65719)

# கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை, நிர்மாணத்துறை, பெருந்தெருக்கள், கைத்தொழில் மகளிர் விவகார அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.

01. மேற்படி அமைச்சினால் கீழே தரப்பட்டுள்ள வேலைகளுக்குரிய கேள்விகள் திருகோணமலை வடக்கு கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை, நிர்மாணத்துறை, பெருந்தெருக்கள், கைத்தொழில், மகளிர் விவகார அமைச்சு கேள்விச் சபைத் தலைவரினால் 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 09 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் இவ்வமைச்சில் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டிடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம் — 7 இலும் அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

03. கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர், நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினால் — வழங்கப்பட்டதும்' இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாண நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி பிற்பகல் 04 45 மணிவரை, ஒவ்வொரு வேலைக்கும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 3,000 ஐயும், மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 750 ஐயும் மேற்படி அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

### வேலைகளின் விவரம்

01. சங்கானை சுற்றியற் கூற்றில் 14 படுக்கைகள் கொண்ட பிரசவ வாட், கட்டம் — 11 நிர்மாணித்தல்.
02. அச்சுவேலி சுற்றியற் கூற்றில் 24 படுக்கைகள் கொண்ட வாட், கட்டம் — 11 நிர்மாணித்தல்.

05 கேள்வி கோருபவர் ஒருவருக்கு, ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாண நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி, அலுவலகத்தில் வேலை நாள்களில் பிற்பகல் 04.45 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். விநாயகலிங்கம்
தலைவர்
அமைச்சுக் கேள்விச்சபை,

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை,
நிர்மாணத்துறை, பெருந்தெருக்கள், கைத்தொழில், மகளிர் விவகார அமைச்சு
வ.கி.மா. உட்துறைமுக வீதி திருகோணமலை.
திகதி: 14—05—1999 [சி/7527]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02 – 12 – 1948
மறைவு: 16 – 04 – 1996

அமரர்

## பொன்னையா பாலகிருஸ்ணேஸ்வரன்

(லங்கா சிமெந்து லிமிட்டெட்)

தீதி: 14 - 05 - 1999

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்'',

தங்களை அன்பாக நினைவு கூரும்

மனைவி, மகன், பெற்றோர்,
மாமி, சகோதரர், மைத்துனர்,
மைத்துனி, மருமக்கள்

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (65712)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

[14– 5 99]



தோற்றம்: 22 – 07 – 1929
மறைவு: 14 – 04 – 1999

திருமதி

## பேராயிரம்பிள்ளை பரமேஸ்வரி

(இணுவில் கிழக்கு, மஞ்சத்தடி)

இன்று [14—05—99] வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் எமதில்லத்தில் நடைபெறும் தாயாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மகன், மருமகள்,
சகோதரி, பேரமக்கள்.

மஞ்சத்தடி,
இணுவில். [65721]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'சீடா' உதவித் திட்டத்தின் கீழ் நீர் இறைக்கும் இயந்திரம்

## 200 விவசாயிகள் நன்மை பெறுவர்

யாழ்ப்பாணம், மே 14

"சீடா" உதவித்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 200 விவசாயிகளுக்கு சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன என்று யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார்.

'சீடா' அமைப்பு வழங்கிய 80 லட்சம்ரூபா மூலம் சுழற்சி முறைக்கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்து கொடுப்பதில் தமது திணைக்களம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது என்றும்—

இந்த வகையில் இதுவரை 856 பேருக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டு வழங்கப்பட்டுள்ளன என்றும் —

ஏனைய 200 பேருக்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள் இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படும் என்றும் —

விவசாயிகள் தொடர்ந்தும் ஆதரவு தருவார்களானால் மேலும் பலருக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை கடன் அடிப்படையில் வழங்கக் கூடியதாக இருக்கும் என்றும் — கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

(இ-7)


## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்
## அவசர அழைப்பு

1996, 97 இல் நியமனம் கிடைக்காத பட்டதாரிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.

இடம்: புதிய உயர்கலைக் கல்லூரி
(ஆரியகுளம் சந்தி)

காலம்: 17 - 05 - 1999 திங்கட்கிழமை
காலை 10-30 மணி (பழைய நேரம்)

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக் கடிதத்துடன் சமுகம் தரவும். (தனித்தனிக் கடிதங்கள் தயாரிக்கப்படவுள்ளன)

ரி. சந்திரகாசன் (தலைவர்)
எஸ். ஜீமஷ் (செயலாளா)

(சி/7530)



மட்டுவில் வடக்கு, சந்திரபுரம்

## அம்பாள் சனசமூக நிலைய

வளர்ச்சி நிதிக்காக

## ராகம்ஸ் இசைக்குழுவினரின்
## ♥ இதய ராகங்கள் ♥

இசை நிகழ்ச்சி

இடம்: மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில்

காலம்: 16 - 05 - 1999 ஞாயிற்றுக்கிழமை
பகல் 1.00 முதல் 5.00 மணி வரை

— விழா அமைப்பாளர்கள்

(சி/7535)



## யா / மகளிர் கல்லூரி

சாவகச்சேரி.

## முறைசாராக் கல்விப் பிரிவு 1999
## விண்ணப்பம் கோரல்

பயிற்சி நெறி:
தட்டெழுத்து சுருக்கெழுத்து (தமிழ்)

மேற்படி பயிற்சிநெறிக்கு பயிலுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

16-05-1999 இக்கு முன் சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

17-05-1999 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

யா / மகளிர் கல்லூரி,
சாவகச்சேரி.
- அதிபர்

(சி/7531)



## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

1999 ஆம் ஆண்டிற்கான இலக்கத் தகடுகள் வழங்குவதற்கான

## கூறுவிலை கோரல்

கீழ்க்காணும் தகடுகள் தயாரித்து வழங்குவதற்கான கூறுவிலையை 1999-05-21 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. துவிச்சக்கர வண்டித் தகடுகள்.
2. வண்டில் தகடுகள்
3. நாய் தகடுகள்.

கூறுவிலைக்குரிய படிவத்தை தலைமையலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ந. திரிலோகநாதன்,
தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை
சுழிபுரம்.

[சி/7532


## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மே 19

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர்ப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் அ. பேரம்பலம் தலைமையில் நடைபெறும்.

யாழ். கல்வித்திணைக்களப் பொறியியலாளர் கு. சிவபாலன் பிரதம விருந்தினராகவும் வலிகாமம் கல்வி வலய பிரிவு மூன்றின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(இ-7)

## முன்பள்ளி ஆசிரியருக்கு பயிற்சி

காரைநகர், மே 14

காரைநகரில் போரூட் சர்வதேச தொண்டர் நிறுவனம் முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இப் பயிற்சி நெறி விரைவில் போரூட் சர்வதேச தொண்டர் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட உள்ளது.

(ஐ-73)

## சமய நிகழ்வில்

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அன்று முற்பகல் 11.00 மணிக்கு சங்காபிஷேகமும் விசேட பூசையும் மாலையில் புதிதாகச் செய்யப்பட்ட சிங்க வாகனத்தில் அம்பாள் பரிவார மூர்த்திகள் சகிதம் உள் வீதி, வெளி வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

(ஐ-73)

★ ★ ★

திருநெல்வேலி காயாரோகணேஸ்வரர் (சிவன் கோவில்) ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(ஐ-86)

### சட்டத்தை மீறும்

# வர்த்தகர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்து

நெல்லியடி, மே 14

வடமராட்சிப் பகுதியில் பாவனையாளர் பாதுகாப்பு சட்டத்தை மீறும் வர்த்தகர்கள் மீதும் நிறை குறைந்த பாணைத் தயாரித்து விற்பனை செய்யும் வெதுப்பக உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பாவனையாளர் பாதுகாப்பு சங்க கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர் என். சிவசீலன் இதனைத் தெரிவித்தார்.

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை வர்த்தகர்கள் சிலர் மீறி வருவதாக உறுப்பினர்கள் பலர் இந்தக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

இவ்விதம் சட்டத்தை மீறி செயற்படும் வர்த்தகர்கள் மீதும் விலைப்பட்டியல்களை பாவனையாளர்களின் பார்வைக்கு வைக்காத உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கோரப்பட்டது.

(இ-109)

# தென்பகுதி இளைஞர் குழு மந்திகையில் சிரமதானம்

நெல்லியடி, மே. 14

வடக்கு— தெற்கு பாலம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள தென்பகுதி இளைஞர்கள், யுவதிகள் ஒன்றிணைந்து இன்று வெள்ளிக்கிழமை காலை மந்திகை மருத்துவமனையில் சிரமதானம் மேற்கொள்வார்கள்.

தென் பகுதி பத்திரிகையாளர் குழுவுடன் வைத்திய சாலைக்கு விஜயம் செய்யும் இளைஞர், யுவதிகள் இங்கு கடமையாற்றும் தென் இலங்கை டாக்டர்களையும் சந்தித்து கலந்துரையாடுவார்கள்.

இதன் பின்னர், உடுப்பிட்டிப் பகுதியில் மனையியல் பொருளியல் பயிற்சி நெறி வகுப்பை பார்வையிடுவார்கள். பிற்பகல் புலோலி மாகனைகாளி கோயில் முன்றலில்கலை, கலாசார ஆய்வு நிகழ்ச்சியிலும், மாலை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் கலை நிகழ்ச்சியிலும், பங்கு பற்றும் இக் குழுவினர், திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் சிநேகபூர்வ கரபந்தாட்டப் போட்டியிலும் கலந்துகொள்வார்கள்.

(ஐ 109-173)

## 74 ஏ, பி நிவாரணம்

யாழ்ப்பாணம், மே 14

74 ஏ, பி நிவாரணத்துக்கு சீனி, அரிசி, பால்மா போன்ற பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிவாரணத்துக்கு வழங்கப்படவேண்டிய பருப்புக்குப் பதிலாக இந்தத் தடவை அரிசி அதிகரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருவதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-5)

## இன்று

யாழ்ப்பாணம், மே 14

திருநெல்வேலி தலங்காவற பிள்ளையார் ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமை நடைபெற்றுவரும் கூட்டுப்பிரார்த்தனை மற்றும் சமயச் சொற்பொழிவுத் தொடரில் இன்று பிற்பகல் 4.30மணிக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் லே. நம்பி உரை நிகழ்த்துவார்.

(இ-3)

# பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். கொமேர்ஷல் வங்கியின் ஆதரவுடன் 15, 17 வயதுப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இன்றும் நாளையும் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

**இன்று**

★ 17 வயது — யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் புனித பரியோவான் கல்லூரி — யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில்.

**நாளை**

★ 15 வயது— ஹாட்லிக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி — ஹாட்லி மைதானத்தில்.

★ 15 வயது — புனித பரியோவான் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி —புனித பரியோவான் கல்லூரி மைதானத்தில்.

★ 17 வயது—புனித பத்திரிசியார் கல்லூரி எதிர்மானிப்பாய் இந்துக் கல்லூரி—புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில்

(இ-3-86)


நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்

## "புத்தாயிரமாண்டு இன்னிசை அருவி"

[Millennium Musical Show]

## விரைவில்...!

மருத்துவபீட மாணவர்கள்

(சி/7533)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் பணிபுரிவதற்கு எமது வைத்திய நிபுணர் முன்வரவேண்டும்

## ரெலோ எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 14

வன்னியில் இன்னல் படும் மக்களுக்கு பணிபுரிய எமது வைத்திய நிபுணர்கள் முன் வரவேண்டும். எமது மண்ணில் இருந்து சென்று நிபுணத்துவம் பெற்றுள்ள வைத்திய நிபுணர்களுக்கு இந்த வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் பிரமுகருமான அ. அடைக்கலநாதன் மேற் கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

நமது தாயகமாகிய வடக்கு- கிழக்கு பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழைப் பாமர மக்களை உங்கள் கண் முன் கொண்டுவர விரும்புகின்றேன். வீடு வாசல்கள் சொத்துக்கள் அனைத்தையும் இழந்து மரநிகழ்களிலும் காடுகளிலும் குண்டுத் தாக்குதல்களுக்கும் இயற்கையின் அனர்த்தங்களுக்கும் முகம் கொடுத்து எவ்வித வைத்திய வசதியும் அற்றவர்களாக அவர்கள் நாளுக்கு நாள் மடிந்து கொண்டிருக்கின்றார்கள்.

அவர்கள் ஒரு புறமிக்க விடுவிக்கப்பட்ட பகுதிகள் எனக் கூறிக்கொள்ளப்படுகின்ற பகுதிகளில் வாழும் மக்கள் கூட வைத்தியர்கள் பற்றாக்குறையாலும் மருந்துத் தட்டுப்பட்டாலும் அவதியுற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

பணம் உள்ளவர்கள் கூட நிபுணத்துவ ஆலோசனைகள் பெற பல சிரமங்களினூடாகப் பிரயாண அனுமதி பெற்று கொழும்புவந்தாலும் கொழும்பில் வதிவிட அனுமதி பெறுவதிலும் இருப்பிட வசதிகளைப் பெறுவதிலும் பல சிரமங்களைஎதிர்நோக்குகின்றனர்.

அரசாங்க வைத்திய நிபுணர்கள் அனைவருக்கும் இக் கட்டத்தில் அன்பான வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன்.

மன்னார் - வவுனியா மாவட்ட ஆதார வைத்திய சாலைகளில் மாதத்தில் ஒரு சில நாள்களைச் செலவழித்து உங்கள் நிபுணத்துவ வைத்திய ஆலோசனைகளை அந்த மக்களுக்கு வழங்க நீங்கள் முன்வரவேண்டும்.

வவுனியா ஆதார வைத்திய சாலையில் ஓரிரு நிபுணர்கள் நிரந்தர சேவையில் உள்ளனர். மன்னார் வைத்திய சாலையில் நிபுணத்துவம் என்ற சொல்லுக்கே இடமில்லை. மன்னார், வவுனியா முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவாகி இப்போது நிபுணத்துவநிலையை அடைந்திருக்கும் வைத்தியர்கள் இதையிட்டு விசேடமாகச் சிந்திக்க வேண்டும் என்று கோருகின்றேன்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ - 56)

---

யாழ்....

[முதலாம் பக்கத் தொடர்]

குறூஸ் நேற்று மடுப் பகுதிக்குச் சென்று அகதிகளுடன் கலந்துரையாடினார்.

"யாழ். குடாநாட்டில் இயல்பு நிலை ஏற்படும்வரை அங்கு எம்மை அனுப்பாதீர்கள்" என்று மக்கள் அவரிடம் கேட்டுக்கொண்டனர்.

இதன் காரணமாக யாழ். அகதிகளைத் திருமலைக்கு இன்று அழைத்துச் செல்ல விருந்த திட்டம் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (இ-3-21)

---

கல்வியங்காட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டது. (இ-3-5)

---

மடுவில்...

[முதலாம் பக்கத் தொடர்]

பரபுரம் முகாமில் முதலில் தங்கவைக்கப்படுவர்.

அதன்பின்னர் இவர்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர்.

வவுனியாவில் உள்ள கிராம சேவையாளர்கள் மடு சென்று தத்தமது பிரிவு மக்களை இனங்கண்டு வவுனியாவுக்கு அழைத்துவரும் பணியை மேற்கொள்வர்.

வவுனியா மேலதிக அரச அதிபர் எஸ். ரகுநாதபிள்ளை இந்தப் பணியை மேற்பார்வை செய்கிறார்.

(இ 3-21)

---


எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்!

சரத்குமார் - விஜயசாந்தி நடிக்கும்

① ராஜஸ்தான் (வீடியோ CD)

அஜித்குமார் [இரு வேடங்களில்] சிம்ரான் நடிக்கும்

② வாலி

கார்த்திக் - தேவயானி நடிக்கும்

③ நிலவே முகம் காட்டு (வீடியோ CD)

[புதிய போஸ்ரர்களும் புதிய வீடியோ CDக்களும் விற்பனைக்குண்டு.]

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/7536)


---

## சஞ்சிகை வெளியீடு

ஹாட்லிக் கல்லூரி விஞ்ஞான மாணவர் மன்றத்தின் "தேடல்" சஞ்சிகையின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மேற்படி கல்லூரிக்கு முன்பாகவுள்ள வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக கணித, புள்ளிவிவரவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி. சிறீசற்குணராசா இந்த வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மலர் வெளியீட்டுரையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா நிகழ்த்துவார். (இ-7)

---

மக்களை...

[முதலாம் பக்கத் தொடர்]

கலந்து கொள்வதன் அவசியம் பற்றி இந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய பலரும் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

குற்றவியல் வழக்குகள் உட்பட பொதுமக்களை நேரடியாகப் பாதிக்கும் செயல்களைக் கட்டுப்படுத்தும் வழக்குகளில் சட்டத்தரணிகள் ஆஜராகுவதென இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தின் பின்னர் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதனை மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடினர்கள்.

விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளையடுத்து கடந்த சில மாதங்களாக யாழ். மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்கள் யாவும் பகிரங்க அமர்வுகளை நிறுத்தி கொண்டது தெரிந்ததே.

---

அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்)

கத் தூதரகத்துக்கு வெளியே ஜே.வி.பி.யினால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின்போது தூதரகத்துக்கு வெளியே பொலீஸார் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

(இ-7)

---


எம்மிடம் புதிய படப் போஸ்டர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

பிள்ளையார் வீடியோ

23, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(65740)


---

285 பட்டதாரி...

[முதலாம் பக்கத் தொடர்]

இந்த நியமனக் கடிதங்களை வரவு - செலவுத் திட்டப் பணிப்பாளரிடம் இருந்து பெற்று இங்கு அனுப்பி வைப்பார் என நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம்— நியமனம் பெறும் பட்டதாரிகள் தமது பிரிக்கேட்டுகளில் பயண அனுமதியைப் பெற்று வரும் பட்சத்தில் அவர்களுக்கான பயண ஏற்பாட்டைச் செய்து தாமுடியும் என்றும்—

சுயமாகவே எவரும் அனுராதபுரம் சென்று நியமனத்தைப் பெறலாம் என்றும்— யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (இ 3-5)

---

நீர்வேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த மாணவர்களைத் தேடி இரு தினங்கள் படை முகாம்களுக்கும் உறவினர் வீடுகளுக்கும் சென்றதாகவும்—

பலன் ஏதும் கிடைக்காததால் மனித உரிமை ஆணைக் குழுவில் நேற்று நண்பகல் முறைப்பாடு செய்ததாகவும் — பெற்றோர் தெரிவித்தனர்.

இவர்கள் காணாமற் போன சம்பவத்தை அடுத்து நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, அச்சுவேலி மகா வித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தா போன்ற கல்லூரிகளுக்கு சிரேஷ்ட மாணவர்கள் நேற்றுச் சமுகமளிக்கவில்லை.

இதற்கிடையில் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி மாணவன் த. சிவரூபன் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டதை அடுத்து மாணவர்களின் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது.

விடுவிக்கப்பட்ட இந்த மாணவனும் நீர்வேலியைச் சேர்ந்தவரே.

இவர் விடுதலையாவதற்கு முதல் நாளே அங்கு இந்த 5 மாணவர்களும் காணாமற் போய் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-11-3)

---


விஷ்ணுவின் பிரமிட் வீடியோ CD வெளியீடு

சரத்குமார் - விஜயசாந்தி

ராஜஸ்தான் (பிரமிட் CD)

பூமகள் ஊர்வலம் ,,

நிலவேமுகம்காட்டு ,,

நியூ விஷ்ணு திரையரங்கில்

10-30, 2-30, 4-30

ராஜஸ்தான் (நேரடி CD யில்)

விஷ்ணு வீடியோ

இணுவில்மேற்கு, இணுவில்.

(65739)


---

# முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 14

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் இந்து நாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடங்களுக்குத்தோற்றும் மாணவர்களுக்கு யாழ். சைவபரிபாலன சபையால் முன்னோடிப் பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஜுலை மாதம் 19 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை நடத்தப்படவிருக்கும் மேற்படி பரீட்சை தொடர்பான சகல விவரங்களும் அடங்கிய அறிவுறுத்தல்கள் கடந்த வருடம் குறிப்பிட்ட பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

---

திருமலை...

[முதலாம் பக்கத் தொடர்)

செய்யப்பட்டுள்ளது என்றும் கடற்படையினர் நேற்று ஒலி பெருக்கி மூலம் அறிவித்தனர்.

முன்னர் அதிகாலை 2மணி முதல் மாலை 5 மணி வரை ஆழ்கடல் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

---

படையினரை...

[முதலாம் பக்கத் தொடர்]

ஊர்வலத்தையும் உண்ணா விரதத்தையும் ஏற்பாடுசெய்துள்ளனர்.

ஊர்வலம் அங்குள்ள மரியன்னை தேவாலயத்தை அடைந்த பின்னர் தேவாலய முன்றலில் உண்ணா விரதம் இடம் பெறும்.

இந்த ஊர்வலம் மற்றும் உண்ணாவிரதம் முதலியவற்றுக்கு யாழ். மாவட்ட குருமட அதிபராக இருந்த எஸ். ஜே. இம்மானு வேல் அடிகளார் தலைமை வகிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

---

மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரஸ்தாப இரண்டு மீனவர்களும் நேற்று முன்தினம் தம்மால் கடலில் விடப்பட்ட மீன்பிடி வலைகளை எடுப்பதற்காகச் சென்ற சமயம் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இரண்டு மீனவர்களும் முதலில் மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் வவுனியா ஆஸ்பத்திரிக்கு மேலதிக சிகிச்சைக்காக நேற்று மாலை கொண்டு வரப்பட்டனர்.

(இ-7)

---

## பங்கீட்டு அட்டை விநியோகம்

சுன்னாகம், மே 14

சுன்னாகம் தெற்கு (ஜே. 196) கிராம சேவையாளர் பிரிவுக்குஉட்பட்டவர்களுக்கு 'இ' பங்கீட்டு அட்டை இன்று காலை 9.30 மணி முதல் கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-27)

## அன்பளிப்பு

யாழ்ப்பாணம் மே 14

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஒரு தொகுதி றோணியோ தாள்களைத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்கு இன்று நண்பகல் கையளிக்கவிருக்கின்றது.

இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வைபவத்தில் வைத்து சேவாச்சிரமத்தின் செலாளர் சுவாமி சித்ரூபானந்த அவற்றைக் கையளிப்பார். (இ-4)

## வானியல் பாசறை

யாழ்ப்பாணம், மே 14

யாழ். மத்திய கல்லூரியில் 8 ஆம், 9 ஆம் தர மாணவர்களுக்கு வானியல் பாசறை நாளை இரவு இடம்பெறும் என்று கல்லூரி அதிபர் க. இராஜதுரை தெரிவித்தார்.

இந்தப் பாசறை நிகழ்வில் யாழ். கல்வி வலய விஞ்ஞானப் பிரிவு அதிகாரிகள், சேவைக்கால ஆலோசகர்கள் ஆகியோரும் பங்குபற்றுவர். (இ-3)

---


## திருத்தம்

நேற்றைய உதயனில், "அந்தண மாணவர்களுக்கு" என்ற தலைப்பில் வெளியான விளம்பரத்தில் 1997 ஆம் ஆண்டில் நடைபெற்ற என்பதை 1998 ஆம் ஆண்டில் நடைபெற்ற என்று திருத்தி வாசிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

விளம்பர இல. 880, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(சி/7537)


---


மலிவு! மலிவு!! மலிவு!!!

(CLEARANCE SALE)

20-05-99 வரை

அனைத்து பல்வகை ஆடைவகைகள், துணிவகைகளையும்

விற்றுத் தீர்த்தல்

விஷேட கழிவு விற்பனை

ரம்மியாஸ் சில்க்ஸ்

121, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மலிவு! மலிவு!! மலிவு!!!

(சி/7520)


---


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-05-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org